இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 23-02-2024

# சண்டிகர் தீர்ப்பு மகத்தானது

கடந்த பிப்ரவரி 1ஆம் தேதி வெளியான தலையங்கத்துக்கு ‘குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்..’ என்று தலைப்பு சூட்டப்பட்டு இருந்தது. அந்தத் தலையங்கத்தின் நோக்கத்தை அப்படியே எதிரொலித்து இருக்கிறது உச்சநீதிமன்றம்!

ஆம் ஆத்மி - காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு விழுந்த வாக்குகளை, செல்லாது என்று ஆக்கி - பா.ஜ.க. வேட்பாளரை, செல்லும் என்று கடைந்தெடுத்த மோசடித்தனத்தை அரங்கேற்றினார் தேர்தல் அதிகாரி. பா.ஜ.க. வேட்பாளர் தேர்வை ரத்து செய்து, ஆம் ஆத்மி - காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெற்றவராக அறிவித்து விட்டது உச்சநீதிமன்றம். இதனைவிட மகத்தான தீர்ப்பும் இருக்க முடியாது. இதனைவிட பா.ஜ.க.வுக்குப் பின்னடைவும் இருக்க முடியாது. இதற்கெல்லாம் வெட்கம், ரோஷம் இருக்கும் கட்சி அல்ல பா.ஜ.க.

சண்டிகர் மேயர் தேர்தலில் ஆம் ஆத்மியும், காங்கிரஸும் கூட்டணி அமைத்து ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை களத்தில் இறக்கியது. தேர்தல் முறையாக நடந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வெற்றி பெறும். எனவே, தேர்தலையே தள்ளி வைத்தார்கள். சனவரி 26ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனைச் சுட்டிக் காட்டினார்கள்.

“நாம் ஒற்றுமையாக நின்றுவிட்டாலே, அது பா.ஜ.க.வை மனரீதியாக பலவீனப்படுத்தி விடும். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

சண்டிகர் மாநகர மேயரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடக்க இருந்தது. ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. பா.ஜ.க.வுக்கு 14 கவுன்சிலர்கள் ஆதரவு இருந்தது. ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள் ஆதரவு இருந்தது. காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆம் ஆத்மியும், காங்கிரசும் இணைந்து போட்டியிட்டதால் மேயர் பதவியை ‘இந்தியா’ கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது. ‘இந்தியா’ கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வட மாநில ஊடகங்கள் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்ய வைத்து விட்டார்கள். தேர்தல் நடந்திருந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வென்றிருக்கும். ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியக் கூட்டணித் தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும்.” என்று முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையுடன் சொன்னார்கள்.

இதற்கு மாறாக சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார். இதனைத்தான் ‘முரசொலி’யின் முந்தைய தலையங்கத்தில் நடந்து விட்ட மோசடியைக் கடுமையாகக் கண்டித்திருந்தோம்.

“பா.ஜ.க.வுக்குத் தெரிந்தது நேரிய வழியல்ல, குறுக்கு வழி மட்டும்தான். அவர்கள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருப்பது அப்படித்தான். இதுதான் பா.ஜ.க.வுக்கு தெரிந்த ஒரே வழியாகும். அதைத்தான் மெய்ப்பித்திருக்கிறது சண்டிகர் மேயர் தேர்தல். பெரும்பான்மை பெற்று மேயராக ஆகி இருக்க வேண்டிய கட்சி ஆம் ஆத்மி ஆகும். ஆனால் கோல்மால் வேலைகளைப் பார்த்து மேயர் பதவியைக் கைப்பற்றி இருக்கிறது பா.ஜ.க.

பா.ஜ.க. எப்படி வென்றது? ஆம் ஆத்மியைச் சேர்ந்தவர்கள், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பா.ஜ.க.வுக்கு கட்சி மாறி விட்டார்களா? இல்லை. மாறாக, அவர்கள் அளித்த வாக்குகளைச் செல்லாது என்று ஆக்கிவிட்டு, பா.ஜ.க. வென்றதாக அறிவித்துவிட்டார்கள். இதை விட மகா கேவலம் இருந்திருக்க முடியுமா? சண்டிகர் மாநகராட்சியில் மொத்தமுள்ள 35 இடங்களில் காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி 20 இடங்களைப் பெற்றுள்ளது. பா.ஜ.க 14 கவுன்சிலர்களையும், சிரோன்மணி அகாலிதளம் ஒரு கவுன்சிலரையும் பெற்றுள்ளது. மேயர் பதவியை ஆம் ஆத்மி கட்சியும், இரண்டு துணை மேயர் பதவிகளை காங்கிரஸ் கட்சியும் பிரித்துக் கொண்டு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. ‘இந்தியா’ கூட்டணி வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் இது. தேர்தலில் காங்கிரஸ் - ஆம் ஆத்மி கூட்டணி 20 வாக்குகளையும், பா.ஜ.க. 16 வாக்குகளையும் பெற்றது. ஆனால் 8 வாக்குகளை செல்லாது என அறிவித்து பா.ஜ.க. குறுக்கு வழியில் வெற்றி பெற்றது. பா.ஜ.க.வின் மகா திருட்டுத்தனம் அல்லவா இது? மோடி தேர்தலா, மோசடித் தேர்தலா என்று எதிர்க்கட்சிகள் கேட்பது உண்மைதானே?

ஒரே ஒரு மேயர் தேர்தலிலேயே இத்தனை மோசடிகள் - முறைகேடுகள் - தில்லுமுல்லுகள் என்றால், நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் செயல், எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒற்றுமையின் மூலம் மட்டுமே இத்தகைய மோசடித்தனங்களை வீழ்த்த முடியும்” - என்று நாம் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

ஆம் ஆத்மி - காங்கிரஸ் கூட்டணியின் மேயர் வேட்பாளர் குல்தீப் குமார், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரி அனில் மாஷி, வாக்குச் சீட்டில் குறியீடு செய்து செல்லாததாக ஆக்கியது உண்மைதான் என்று நீதிபதிகள் முன் ஒப்புக் கொண்டார். ‘குறியீடு மட்டும் செய்யவில்லை, அந்த வாக்குச் சீட்டில் வரி வரியாக எழுதி இருக்கிறார் தேர்தல் அதிகாரி’ என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். ‘ஆம் ஆத்மிக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டில் மட்டுமே இதனை தேர்தல் அதிகாரி எழுதி உள்ளதால் அதனை குற்றச் செயலாகக் கருதவேண்டும்’ என்று தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு கூறியது. சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. அடைந்த வெற்றியையே ரத்து செய்தது உச்சநீதிமன்றம்.

**சிதைக்கப்பட்ட எட்டு வாக்குச் சீட்டுகளின் வாக்குகளையும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளருக்கு வழங்கி அவரை வெற்றி பெற்றவராக நீதிபதிகள் அறிவித்தார்கள். சண்டிகர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் மகத்தான தீர்ப்பை அளித்தது. முறைகேடு செய்த தேர்தல் அதிகாரி தண்டனைக்கு உள்ளாவார். அவரை முறைகேடு செய்யத் தூண்டியவர்களுக்கு என்ன தண்டனை?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.2.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டிற்கான மேலிடப் பொறுப்பாளர்கள் அஜய் குமார் மற்றும் ஸ்ரீவெல்ல பிரசாத் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### கணினித் திரை உள்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம்!

## பள்ளி மாணவர்களுக்கென அரசு வெளியிட்ட ‘மணற்கேணி’ செயலி!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

*சென்னை, பிப். 23-*

*பள்ளி மாணவர்களுக்கென தமிழ்நாடு அரசு வெளியிட்ட மணற்கேணி செயலி புதிய வடிவமெடுத்திருக்கிறது. காணொலிப் பாடங்கள் அடங்கிய மணற்கேணியை இனி கணினித் திரை உட்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம். மணற்கேணி இணையதளத்தை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.*

*கல்வியையும் கற்றல் முறையையும் ஜனநாயகப்படுத்தும் செயல்திட்டத்தை நமது பள்ளிக் கல்வித் துறை இலக்காகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடனும், அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்வதை எளிதாக்கி சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை சரிசெய்து சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்கிற இலக்குடனும் தமிழ்நாடு அரசு 2023 ஆம் ஆண்டில் மணற்கேணி செயலியை அறிமுகப்படுத்தியது. பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களுக்கு மட்டுமே காணொலிப் பாடங்கள் கிட்டும் என்கிற நிலையைப் போக்கி அவற்றை அனைவருக்குமானதாக மாற்றுவதே அரசின் நோக்கம்.*

*மணற்கேணி ஆசிரியர்களுக்கு துணைக் கருவியாக பயன்படக்கூடிய ஒன்று. மணற்கேணி செயலியை தரவிறக்கம் செய்து அதில் உள்ள பாடங்களை மாணவர்களுக்கு வகுப்பறையில் உள்ள ஸ்மார்ட் போர்டில் திரையிட்டுக் காட்டி பாடங்களை நடத்தி வந்த ஆசிரியர்கள் இனி இணையதளம் வாயிலாக பாடங்களை நடத்தலாம். காட்சி ரீதியாக பாடங்கள் இருப்பதால் மாணவர்களுக்கு கற்றல் மேலும் எளிதாகும்.*

*மணற்கேணி செயலி உலகின் எந்த எந்த மூலையில் இருந்தும் ஆசிரியர்கள் மாணவர்கள் என எவர் வேண்டுமானாலும் பயன்படுத்தும் வகையில் ஓபன் சோர்ஸ் ஆக வெளியிடப்பட்டது. இப்போது இணையதளம் மூலமாகவும் பயன்படுத்தலாம் என்பதால் அலைபேசி வாயிலாகவும் கணினி வாயிலாகவும் இதனை பயன்படுத்தலாம். இதன் எளிமையான பயன்பாடு இதன் நோக்கத்தை பறைசாற்றும்.*

*இணையதளத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் என இரு மொழிகளிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை பல பாடப்பொருள்களாக, வகுப்புகள் தாண்டி வகைபிரித்து அதற்கேற்றபடி காணொலி வாயிலான விளக்கங்களை உருவாக்கி அளித்திருக்கிறது கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில் (எஸ்.சி.இ.ஆர்.டி) நிறுவனம். இதன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள காணொலி கள் பாடப்பொருள்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.*

*6, 7, 8, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கான அறிவியல், கணிதம், ஆங்கிலம், இயற்பியல், வேதியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் முதற்கட்டமாக பாடப்பொருள்கள் காணொலியாக தரப்பட்டுள்ளன.*

*ஒவ்வொரு காணொலியின் முடிவிலும் வினாடி வினா வாயிலாக மாணவர்களின் புரிதல் திறனை சரி பார்க்கும் வசதியும் உள்ளது. இதன் மூலம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நடத்திய பாடம் முறையாகப் புரிந்திருக்கிறதா என சரி பார்த்துக்கொள்ள முடியும். முதல் கேள்வி எளிமையாகத் தொடங்கி படிப்படியாக விடையளித்துக் கொண்டே வருகையில் கொஞ்சம் கொஞ்சமாக கேள்விகளின் கடினத் தன்மை கூடிக் கொண்டே வரும். ஒவ்வொரு கேள்விக்குமான விரிவான விடைகளும் காணக் கிடைக்கும். ஏதேனும் ஓரிடத்தில் மாணவர்களுக்கு புரிந்து கொள்ள சிரமமாக உள்ளது எனில் ஆங்காங்கே அவர்களுக்கான உதவிக் குறிப்புகளும் உண்டு.*

*மணற்கேணியில் உள்ள காணொலிப் பாடங்கள் முறையான கற்றல் பயணத்திற்கு வழிவகுக்கின்றன. Laddered Learning approach எனப்படும் அணுகுமுறை இதில் கையாளப்பட்டுள்ளது. அதாவது எடுத்துக்காட்டாக, பன்னிரண்டாம் வகுப்பில் வரும் ஒரு பாடப்பொருளை முறையாகப் புரிந்து கொள்ள ஆறாம் வகுப்பில் அதற்கான அடிப்படைப் பாடம் இருக்கிறது என்றால் அதைப் படித்துப் புரிந்து கொண்டுவிட்டு பின் ஏழாம் வகுப்பில் அது குறித்துப் பாடமிருந்தால் அதையும் படித்துவிட்டு படிப்படியாக பன்னிரண்டாம் வகுப்புப் பாடப்பொருளுக்கு வரலாம். இதன்மூலம் பாடங்களை எளிதில் புரிந்துகொள்வதற்கும் எதையும் விட்டுவிடாமல் படிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.*

*திரையில் தொழில்நுட்பக் கலைச் சொற்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் காணலாம். கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாட்டை மணற்கேணி மிகவும் மகிழ்ச்சிகரமானதாக மாற்றும்.*

*இப்படிப் பயிற்றுவிப்பதன் வாயிலாக பொதுத் தேர்வில் கேட்கப்படும் எந்த வகையான கேள்விகளுக்கும் மாணவர்கள் எளிதாக விடையளிக்க முடியும். அது மட்டுமல்லாமல் ஜே.ஈ.ஈ போன்ற அகில இந்திய நுழைவுத் தேர்வுகளுக்கும் எளிதில் தயாராக முடியும். கடந்த பல ஆண்டுகளில் கேட்கப்பட்ட வினாக்கள் அடங்கிய வினா விடை வங்கி ஒன்றும் உண்டு. போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், கல்வி உதவித்தொகைக்கான தேர்வுகள் என அனைத்தையும், மணற்கேணியை துணைக்கருவியாகக் கொண்டு பாடங்களை கற்பிப்பதன் மூலம் மாணவர்களை மிக எளிதாக ஆசிரியர்கள் வெற்றிகொள்ள வைக்க முடியும்.*

*இந்தக் காணொலிகள் 2டி மற்றும் 3டி அனிமேஷன் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பதால் கற்போர் உடனடியாகப் புரிந்து கொள்வதற்கும் புரிந்து கொண்டவற்றை நீண்ட காலம் நினைவில் வைத்துக் கொள்வதற்கும் உகந்தவை.*

*சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ளும் விளக்கப்படங்கள் உள்ளதாலும் கற்றல் முற்றிலும் ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அனைத்துக் காணொலிகளையும் கேள்விகளையும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ள கடவுச்சொல் எதுவும் தேவையில்லை. எந்தத் தடையும் இன்றி மிக எளிதாக அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

*மணற்கேணி இணையதள முகவரி :*

*https://manarkeni.tnschools.gov.in*

*அலைபேசியில் மணற்கேணி செயலியை ப்ளே ஸ்டோரில் தேடவேண்டுமெனில் TNSED Manarkeni என்று உள்ளீடு செய்து தேடவேண்டும். இதுவரையிலும் 2,00,000 முறை இச்செயலி தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது உருவாக்கப்பட்ட மணற்கேணி இணையதளம் வாயிலாக இன்னும் அதிகமானோரை இக்காணொலிகள் சென்று சேரும்.*

*இவ்வாறு பள்ளிக் கல்வித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

### திருவாரூர் - தஞ்சை மாவட்ட மக்களின் கனவுத்திட்டமான

## நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் அடிக்கல்நாட்டு விழா!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு !

*திருவாரூர், பிப். 23-*

*திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கனவு திட்டமான நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் திட்டம் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜாவின் தொடர்முயற்சியால் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி இன்று (23.02.2024 - வெள்ளிக்கிழமை) காலை அடிக்கல் நாட்டப்படுகிறது. தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைஅமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்று அடிக்கல் நாட்ட இருக்கின்றனர்.*

*திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்ட மக்கள் மற்றும் வர்த்தகர்கள் என அனைத்துத் தரப்பினரும் நீடாமங்கலம் ரயில்வே கேட் மூடப்படும் நேரங்களில் நீண்ட நேரம் காத்திருந்து அவதிப்பட்டு வந்தனர். ஆம்புலன்ஸ் கூட போகமுடியாமல் வாகனப்போக்குவரத்து தடைப்படும். இந்த நிலையில் கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்கிற தேர்தல் வாக்குறுதி தரப்பட்டிருந்தது.*

*முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோரின் தொடர் முயற்சிகளால் திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல வாழ்த்துக்களுடனும் தற்போது நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் நிறைவேற்றும் பணி தொடங்கப்படுகிறது.*

*தமிழ்நாடு அரசின் தொழில்முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா எடுத்த பெரும் முயற்சியின் பலனாக இன்று (23.02.2024 - வெள்ளிக்கிழமை) காலை நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் பணிகளுக்காக அடிக்கல் நாட்டும் விழா நடைபெறுகிறது.*

*இந்த விழாவில் அரசியல், வர்த்தகம், ஆன்மீகம் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள், ஊராட்சி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என பெருந்திரளானோர் பங்கேற்கின்றனர்.*




நேற்று (22.02.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் ஊரகப்பகுதிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்கிட பள்ளிக் கல்வித்துறைக்கும், சிவ் நாடார் அறக்கட்டளைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் ஆர்,சுதன் ராமசாமி, சிவ்நாடார் அறக்கட்டளை நிர்வாகிகள் சுந்தர், பேனர்ஜி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.